இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -05

# நேர்மை நெறி

மே 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல

(NERMAI NERI)

Rs.10

## அரசியல்வாதிகளின் ஊழல்களாலும் இலவசங்களாலும் வீழ்கிறது இலங்கை




## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823

e-mail:acmchennai2001@yahoo.com

website:anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே** !

வணக்கம் !. மீண்டும் இம்மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சென்ற இதழில் இம்மடலை எழுத இயலாமல் போனதற்காக வருந்துகிறேன்.

**நெடுஞ்சாலைத்துறையில் ஊழல்கள்:-** தற்போது கரூர் மாவட்டத்தில், நெடுஞ்சாலைத் துறையில் சாலைப்பணிகள் செய்யாமலேயே ஒப்பந்தாரர்களுக்குப் பணப்பட்டுவாடா நடைபெற்றதாக ஊழல் புகார்கள் தினசரிகளிலும் தொலைகாட்சிகளிலும் வெளியாகின. உடனே, சம்பந்தப்பட பொறியளர்கள் பலர் தற்காலிக பணிநீக்க்ம் செய்யப்பட்டனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இதில் வேதனையாதெனில், வேலைகளை செய்யாமலேயே பணம் பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர்களும் அதிகாரிகளும் இரவோடு இரவாக சாலைப்பணிகளை முடித்து விட்டனராம். இதற்கு காவல்துறையினர் முழுப்பாதுகாப்பு கொடுத்துள்ளனர். அரசுக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் புகார் அளிக்கப்பட்ட பின்னரும், காவல்துறையினர் பாதுகாப்புடன் சாலைப்பணிகள் செய்யப்பட்டு குற்றச்சாட்டுக்கான ஆதாரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இது மிகவும் வேதனை அளிக்கிறது.

இந்த சாலைப்பணிகள் அனைத்தும் சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் என்பது நமது விசாரனையில் தெரியவருகிறது. இதில் வேதனையாதெனில், இது குறித்து எந்த ஒரு பொறியாளரும் வாய் திறக்க மறுக்கின்றனர். மேலும், ஒரு வேலையை செய்யாமலேயே ஒப்பந்தக்காரருக்கு பணம் பட்டுவாடா செய்வதென்றால், அந்த பணிக்குப் பொறுப்பான உதவி/இளநிலை பொறியாளர், உதவி கோட்டப்பொறியாளர், கோட்டப்பொறியாளர், சாலை ஆய்வாளர்கள், தரக்கட்டுப்பாட்டுப்பிரிவின் உதவி மற்றும் உதவிகோட்டப் பொறியாளர்கள் என ஆறு அதிகாரிகள் ஒத்துழைப்பு இன்றி நடந்திருக்க வாய்பில்லை. ஆக இந்த ஆறு தனிப்பட்ட நபர்களில் ஒருவர் கூட நேர்மையாளர்கள் இல்லை என்பது ஊழலின் ஆணிவேர் பரவியுள்ளதின் ஆழத்தைக் காட்டுகிறது. இப்போது, மேலும் இது போன்ற ஊழல்கள் பல்வேறு கோட்டங்களில் நடைபெற்றிருக்கவும் வாய்ப்புள்ளதால் நெடுஞ்சாலைத்துறையின் அனைத்துக்கோட்டங்களிலும் உடனடியாக ஆய்வு/விசாரணை நடத்த வேண்டும்: தவறு செய்தவர்கள் அனைவரும் தண்டிக்கப்படவேண்டும்.

`ஒரு சாலையை அகலப்படுத்த வேண்டுமாயின், அந்த சாலையின் பயன்பாட்டினை/அதாவது போக்குவரத்து எண்ணிக்கையின் அடிப்படையிலேயே, சாலையை எவ்வளவு அகலப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டுமே தவிர, தேவையில்லாமல் சாலையை அகலப்படுத்தி அரசுப்பணத்தை வீணடிப்பது கிரிமினல் குற்றமாகும். மேலும், எவ்வளவு உயரத்திற்கு சாலைப்படுகையை பலப்பாடுத்த வேண்டும் என்பதற்கு சாலையின் அடித்தள மண்மாதிரிகள் எடுத்து பரிசோதனைசாலையில், மண்ணின் தாங்கும் தன்மையை அறிந்து அதற்கேற்ப சாலையைப் பலப்படுத்தும் உயரம் பொறியாளர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும். இது போன்ற எந்த அறிவியல் பூர்வ பரிசோதனைகள் எதுவும் இன்றி சாலையை அகலப்படுத்தும் பணியும் படுகை உயரங்களும் [strengthening layers] முடிவு செய்யப்படின், செய்யப்படும் ஊழலின் எல்லை அளவில்லாமல் போய்விடும்.

1991-96 அம் ஆண்டுகளில், இது போன்று தான் சுடுகாட்டு ஊழல் நடந்தேறியது. சுமார் ரூ.10,000/-கூட பெறாத ஒரு சுடுகாட்டுக்கூரைக்கு உரிய மதிப்பீடு தயாரித்து தலைமைப்பொறியாளரால் தொழில்நுட்ப ஒப்புதல் பெறாமல், ஒரு சுடுகாட்டுக்கூரையின்

மதிப்பு ரூ.30,000/- என்று சகட்டுமேனிக்கு சுடுக்காட்டுகூரைகள் அமைக்க ஒப்பந்தகாரர்களுக்கு வேலை உத்திரவுகள் வழங்கப்பட்டு, ரூ.10,000/- பணிக்கு, ரூ.20,000/-ம் கொள்ளையடிக்கப்பட்டது. இதுவே, இச்சாலைப் பணிகளிலும் நடந்திருக்க வாய்ப்புள்ளது. எனவே, உரிய குற்றவழக்கு பதிந்து விசாரனைக்குழுவில் ஒரு நேர்மையான பொறியாளரையும் இணைத்து விசாரனை செய்தால் மட்டுமே, முறைகேடுகள் வெளியே வரும். குற்றவாளிகள் தண்டிக்கபடுவர். இது போன்ற கொடூரமான ஊழல்கள் நடக்க வேண்டுமாயின், அரசியல் தலையீடு இல்லாமல் நடந்திருக்க வாய்ப்பில்லை. சுடுகாட்டுக்கூரை ஊழலிலும் அரசியல் தலையீடு இருப்பது நிருபனமானதால் தான் அமைச்சர் சிறை சென்றார். எனவே விசாரணை நேர்மையாக நடப்பதோடு மட்டுமின்றி, இனி இதுபோன்று நடக்காமல் இருக்கவும் உரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். எடுக்கும் என்று எதிர்பார்ப்போமாக !. இது குறித்து தேவைப்படின் நம்து இயக்கமும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒன்றுபடுவோம்! சட்டப்படி போராடுவோம்!! வெற்றிபெறுவோம்!!!.

நன்றி! வணக்கம்!!.

அன்புடன்,

(ந.சுப்ரமனியன்)



## முன்மாதிரியாக இருப்போம்.

**கார்த்திகை ராஜன்**
**பொதுச்செயலாளர்**

அது தவறு, இது தவறு, அவர் தவறு செய்கிறார், இவர் தவறு செய்கிறார் என்று நாள் முழுவதும் யாராவது ஒருவரைக் குறை சொல்லியே வருகின்றோம். ஆனால் மற்றவர்கள் செய்த அதே தவறை நாமும் செய்து கொண்டுதான் வருகின்றோம்...!

இதில் யார் செய்வது தவறு...?, யார் மாற வேண்டும்...?என்பதே கேள்வி...

எல்லோரும் எல்லோருக்கும் அறிவுரை கூறிவிட முடியாது. ஒருவருக்கு அறிவுரை கூற வேண்டும் என்றால் முதலில் அதற்கான தகுதி நமக்கு வேண்டும்...

எந்த செயலிலும் நாம் முன் மாதிரியாக இருந்தால் தான் நம் சொல்லுக்கு மரியாதை இருக்கும். ஆழ்துளைக் கிணற்றில் குழந்தை ஒன்று தவறுதலாக விழுந்து விட்டதென்றால்,. நாடே அதைப்பற்றியே எங்கும் பேச்சாக இருக்கும்....

அந்தக் குழந்தைக்கு இறை வழிபாடு செய்துகொண்டே, நிரம்பி வழியும் பேருந்து படிக்கட்டில் தொங்கிக் கொண்டு பயணம் செய்தார் மூன்று குழந்தைகளை பெற்றவர்....

ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த குழந்தைக்கு பரிதாபப் பட்டுக்கொண்டே பதினாறு பள்ளி குழந்தைகளை தன் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு செல்கிறார் ஒரு முச்சக்கர வாகன ஓட்டுநர். ஆழ்துளைக் கிணற்றை மூடாதவர்களை வசை கூறியவாறே கைபேசியில் பேசியபடி இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார் வாகன ஓட்டுனர் ஒருவர்...

சீனாவைப் பார், சிங்கப்பூரைப் பார் என்று புலம்பிக் கொண்டே பாதையின் அருகில் உள்ள மின் மாற்றியின் (டிரான்ஸ்பார்மர்) கீழ் அவசரத்துக்கு ஒதுங்கினார் ஒரு சாமானியன்...

மனிதாபிமானம் என்பதே இப்போது கொஞ்சம் கூட யாருக்கும் இல்லை என்று பேசிக் கொண்டே, விபத்தில் அடிபட்டு உயிருக்கு போராடிக் கொண்டு இருப்பவரை காணொளி எடுத்து வலைதளங்களில் புகுத்தினார் ஒரு நல்லவர்...

மக்கள் 2000 ரூபாய் வாங்கிக்கொண்டு வாக்களிக்கும் வரை இப்படித்தான் இருக்கும் என்று திட்டிவிட்டு, 50,000 ஆயிரம் ரூபாய் கையூட்டு கொடுத்து பணியிட மாற்றம் வாங்குகிறார் ஒருவர். நாட்டின் பொருளாதாரம் சரிந்து போனதால் மனம் உடைந்து, தினமும் 500 ரூபாய் மதுபானக் கடைக்கு (டாஸ்மாக்) வீண்செலவு செய்கிறார் ஒரு குடிமகன்...

நீர் வாங்கவும், மது (பீர்) வாங்கவும் இரு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டே, தொழிற்சாலைகளால் தான் காற்று மாசு ஏற்படுகிறது என்கிறார் ஒருவர்...

பொதுவாக அடுத்தவர் முதுகை பார்த்துச் சிரிக்கும் எவரும் தன் முதுகை சுத்தமாக வைத்துக் கொள்வதில்லை...

நம்மிடம் ஆயிரம் குறைகளை வைத்துக் கொண்டு மற்றவர்களை திருந்த வேண்டும் என்று எண்ணுகின்றோம். ஆம் நம் குறையை நீக்கி பிறர் குறையை காணாதீர் நம்மைத் திருத்தி அமைத்துக் கொள்வதற்கு பதிலாக, உலகத்தை எப்படியாவது மாற்றியமைத்து விடுவது என்று மிகவும் முயற்சிக்கிறோம்.

அது சாத்தியமல்ல. மிகுந்த காலமும், உழைப்பும் விரயமான பிறகுதான் ‘திருந்த வேண்டியது நாம்தான்’ என்பது புரியும்.

மாற்றத்தை உருவாக்க விரும்புபவர்கள் தங்களிடம் இருந்து தொடங்க வேண்டும். நாம் மாறினால் மொத்த சமூகமும் மாற வாய்ப்பு உருவாகும்.

**ஆம்!, முதலில் நாம் மாறுவோம். தானாகவே மக்கள் மாறுவார்கள்.**
**மாற்றம் நம்மிடம் இருந்து துவங்க வேண்டும்.**

---

## நாட்டைக் கெடுத்தாங்க (கவிதை)

லஞ்சத்துக்கு பேர் எடுத்ததும்
நம்ம நாடுங்க
அரசியல் கட்சிகள் அதிகம் இருப்பதும்
நம்ம நாடுங்க
அரசியல்வாதிகள் ஓசி சோறு தின்பதும்
நம்ம நாடுங்க
சொத்து குவிப்பு வழக்கை மூடி மறைபதும்
நம்ம நாடுங்க
அரசியல்வாதிகள் பொய்யே மெய் எனப் பேசுவதும்
நம்ம நாடுங்க
அரசன் போல் ஆட்சி ஆண்டதும்
நம்ம நாடுங்க
ஓட்டு வாங்க தெருத்தெருவா பொய்பேசுவதும்
நம்ம நாடுங்க
ஜெய்ச்சதும் மக்களைத் தீக்குளிக்க வைப்பதும்
நம்ம நாடுங்க
நடிப்புக்கு பேர் போனதும்
நம்ம நாடுங்க
படிப்புக்கு பணம் கேட்பதும்
நம்ம நாடுங்க
மாறி மாறி ஆட்சி ஆளுவதும்
நம்ம நாடுங்க
நீதிபதிகள் அதிகம் வாய்தா போட்டு காலங்கடப்பதே
நம்ம நாடுங்க

## படித்ததில் பிடித்தது - (கேடுகெட்ட மக்கள்)

இந்த நாடும் மக்களும் வீணாய்ப் போனதற்கு முக்கிய காரணம் கேடுகெட்ட மக்களே என்பதற்கான ஓர் உதாரணம் இதோ..

கோவை மாநகரில் உள்ள மக்களில் 55 சதவீதம் பேர் பொதுவாகனங்களை பயன்படுத்திக்கொண்டும் மீதமுள்ள 45 சதவீதம் பேர் சொந்த வாகனங்களை வைத்துக்கொண்டும் நாள்தோறும் பயணிக்கின்றனர்.

இந்த நகரில் உள்ள சுற்றுச்சூழல் மாசினை கட்டுப்படுத்தும் பொருட்டு OFO எனும் நிறுவனம் கடந்த ஜனவரி மாதம் 2000 சைக்கிள்களை இங்கே பயனாளர்கள் பயன்படுத்திக் கொள்ள கோவை மாநகரின் பிரதான இடங்களில் நிறுத்தி வைத்தது. இந்த சைக்கிள்களை பயனாளர்கள் இலவலசமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.. இப்படி பயன்படுத்திக் கொள்ள பயனீட்டாளர்கள் தங்களது மொபைல் ஃபோன்களில் அந்த நிறுவனத்தின் செயலியை தறவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.

இந்த செயலியில் பயனீட்டாளர்களின் விவரங்கள் பதிவு செய்யப்படும். இவர்கள் இந்த சைக்கிளை பயன் படுத்தும்போது அதில் பொருத்தப்பட்டுள்ள பூட்டு இந்த செயலி மூலம் மட்டுமே திறக்க அனுமதிக்கப் பட்ட பின்னர் அந்த எண்ணுடைய சைக்கிளை அவர் பயன்படுத்திக்கொள்ளலாம்..

இந்த சைக்கிளில் பொருத்தப்பட்டுள்ள ஜிபிஆர்எஸ் கருவியானது பயன்பாட்டாளர் அதனை எங்கே கொண்டு செல்கின்றார் என்ற விவரத்தை அந்த நிறுவனத்திற்கு காண்பிக்கும். ஆரம்பவிழா வெகு சிறப்பாக நடந்தேறி ஏராளமான கல்லூரிமாணவ மாணவிகள் இந்த சைக்கிள்களை பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால் ஒரு சில நாட்களிலேயே சில சமூக விரோதிகள் இந்த சைக்கிளில் பொருத்தப்பட்டு இருந்த பூட்டை உடைத்தும் ஜிபிஆர்எஸ் கருவியை செயலிழக்கச்செய்தும் எடுத்துக்கொண்டு போய் விட்டனர். சிலர் இதையும் தாண்டி, கொண்டு போன சைக்கிளை நிறம் மாற்றி ஃபாரின் சைக்கிள் என்று பேரம் பேசி விற்றும் விட்டனர். சிலர் சைக்கிள்களை கொண்டு சென்று எரித்தும் விட்டனர். இரண்டே மாதத்தில் 2000 சைக்கிள் 200 ஆக சுருங்கிப்போனது.

இந்த நிறுவனத்தின் நோக்கமே முதற்கட்டமாக கோவையில் இந்த திட்டத்தை துவக்கி பின்னர் படிப்படியாக எல்லா நகரங்களுக்கும் கொண்டு சென்று ஓரளவு சுற்றுச்சூழலை கட்டுப் படுத்தவும், வாகன போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், குறைந்த தூரங்களுக்கு மக்கள் சைக்கிள்களை பயன்படுத்தி ஆரோக்கியம் பெறவும் ஆரம்பிக்கப்பட்டது. இப்படி இரண்டு மாதத்தில் இந்த திட்டம் படு தோல்வி அடைந்ததால் அந்த நிறுவனம் இந்த திட்டத்தை தொடர விடாமல் கைவிட்டு விட்டது..

மேலைநாடுகளில் இந்த திட்டம் நடைமுறையில் உள்ளது. பயனாளர்கள் இதுபோன்று சைக்கிள்களை சேதப்படுத்துவதும், திருடிக்கொண்டு சென்று தங்களது சொந்த பயன்பாட்டிற்கும் பயன்படுத்திக் கொண்டது கிடையாது. நம் நாட்டில் உள்ள பெரும்பாலான

மக்கள் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், பொது சொத்துக்களை கொள்ளையடித்தல், திருடுதல் போன்ற செயல்களில் இன்னமும் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றார்கள்.

சுய கட்டுப்பாட்டுன் ஒழுக்கம் எதுவும் இல்லாமல் இப்படி நம்மில் பலபேர், பேருந்து மற்றும் இரயில் பெட்டிகளில் உள்ள சீட்டுகளில் தன்னுடையை பெயரையும் தன் காதலியின் பெயரையும் ஆணி கொண்டு கிழித்து எழுதுவது, கழிப்பறைகளில் அசிங்கமான படங்களை வரைந்து அதில் தன்னுடைய காதலியின் பெயரை எழுதுவது, சாலைகளின் ஓரங்களில் பெண்கள் நடந்து செல்லும் போதே கண்டுகொள்ளாமல் சிறுநீர் கழிப்பது, சாலை விதிகளை மதிக்காமல் நடப்பது, பொதுஇடங்களில் நாகரிகமின்றி நடப்பது, கண்ட இடங்களில் குப்பைகள் போடுவது எல்லாம் இன்னும் எத்தனை தலைமுறைகளுக்கு மாறாமல் இது தொடருமோ தெரியவில்லை.

வேறு எந்த நாட்டிலும் இதுபோன்ற அசிங்கங்களை காணமுடியாது.. மேலை நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்கின்றோம். மேலை நாட்டு உணவுவகைகள், மேலைநாட்டு உடைகள், மேலைநாட்டு நாகரீகங்கள் இவற்றை எல்லாம் உடனே பின்பற்றக் கற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் நமக்கு அவர்களது சுய ஒழுக்கத்தையும், அந்த நாட்டு அரசாங்கம் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளையும் விதிமுறைக ளையும் அவர்களைப் போல் இங்கே பின்பற்ற வேண்டும் என்ற எண்ணமே வருவதில்லை. ஜீன்ஸ் பேன்ட் அணிந்து, ஷூ மாட்டிக்கொண்டு பிசா- பர்கர், கே.எ.்ப்.சி. சிக்கனை கடித்துவிட்டு கோக் குடித்துவிட்டால் மட்டும் ... மேலைநாட்டு கலாச் சாரத்தை பின்பற்றுவதாக கருதிவிடக்கூடாது.

நாமும் அவர்களைப்போல் கட்டுப்பாடோடு, தனி மனித ஒழுக்கத்தோடு வாழவேண்டும் எனும் எண்ணம் மக்களுக்கு ஏற்படும் வரை அரசாங்கம் அல்லது தனியார் செய்யும் எந்த நலப்பணித்திட்டங் களும் இப்படித்தான் மண்ணோடு மண்ணாகிப் போய்விடும்..

**அரசாங்கத்தை மட்டும் குறை கூறிப்பயனில்லை. மக்களும் பெரும்பாலான விஷயங்களில் திருந்த வேண்டும்..மக்களின் மாற்றம்தான் ஒரு நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துமே தவிர வேற எந்த சட்ட திட்டங்களும், விதிமுறைகளும், கடுமையான தண்டனைகளும் பயனளிக்காது.**

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

| | | |
|---|---|---|
| | திரு **N** சுப்ரமணியன், தலைவர் | **: 9444274352** |
| | திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் | **: 87783 12823** |
| | திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் | **: 90031 25142** |
| **E- Mail** | **: acmchennai2001@yahoo.co.in** | |
| **Website** | **: anticorruptionchennai.com** | |

## நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

### என் வருத்தம் என்னோடு!

சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாய்ப் பதவி வகித்தவர், பம்மல் சம்பந்த முதலியார். ஒருநாள் அவரது துணைவியார் காலமாகிவிட்டார். அன்று அவர் நீதிமன்றத்திற்கு வரமாட்டார் என்றே அனைவரும் நினைத்திருந்தனர்.

ஆனால்-

அவர்கள் நினைத்ததற்கு மாறாக அவர் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு, சரியாக பதினோரு மணிக்கு நீதிமன்றத்துக்கு வந்து விட்டார்.

அங்கிருந்த அனைவருக்கும் ஒரே வியப்பு.!

ஒரு நீதிபதி அவரைப்பார்த்து ,"முதலியாரே! இன்றைக்கும் நீங்கள் கோர்ட்டுக்கு வர வேண்டுமா?" என்று கேட்டார். "ஆமாம்! என் வருத்தம் என்னோடு தான் இருக்க வேண்டும். வழக்கைத் தள்ளி வைத்து மற்றவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது!" என்றார் சம்பத் முதலியார்.

கேள்வி கேட்ட சக நீதிபதி, சம்பந்த முதலியாரின் கடமை உணர்ச்சியை எண்ணிப் பெரிதும் வியந்தார்.

---

### துண்டு மாற்றிப் போட்ட காமராஜர்.

காமராஜர் ஒரு நாள் தன் தோளில் வலது பக்கத்தில் துண்டு போடுவதற்கு பதில் இடது பக்கத்தில் போட்டு இருந்தார்.

உடனே பத்திரிகையாளர்கள் துண்டு மாற்றி போட்டுள்ளீர்கள். எதுவும் விஷேசமா? என்று கேட்டனர். காமராஜர் ஒன்றும் இல்லை. சும்மாதான் போட்டுள்ளேன் என்று சொன்னார்.

பத்திரிகையாளர்கள் விடவில்லை .துண்டு மாற்றி போட்டதற்கு காரணம் என்ன என்று துளைக்க ஆரம்பித்து விட்டனர்.

உடனே காமராஜர் ஒண்ணும் இல்லைய்யா., இடது பக்கம் சட்டை லேசா கிழிந்துள்ளது.அதை மறைக்கத்தான் இடது பக்கம் துண்டை மாற்றிப் போட்டுள்ளேன். வேணும்ன்னா பாருங்கள் என்று துண்டை விட்டு, எடுத்து கிழிந்த சட்டையை காண்பித்தாராம்.

இவர் தான் உண்மையான மக்கள் தொண்டர் இன்றைய அரசியல்வாதிகள் பச்சை குத்துவதிலும்.. பால் காவடி தூக்குவதிலும்... ஸ்டிக்கர் ஓட்டுவதிலும்... குடும்பத்துடன் ஊழல் செய்வதிலும் பிசியாக உள்ளனர்...

***பகிர்வு - தகவல் உலா***

## அப்துல் கலாம் வழியில் அடியேன் அரவிந்த் கண் மருத்துவமனை சேலத்தில்: கவிஞர் தணிகை.

அப்துல் கலாம் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் தமது அனுபவங்களை எழுதி இருந்தார். எத்தனை பேர் பகிர்ந்து கொண்டீரோ தெரியாது. அவர் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த போது இஜட் + கேட்டகிரி கமாண்டோ ஃபோர்ஸ்க்கெல்லாம் தெரியாமல் கண் அறுவை சிகிச்சைக்கு சென்று உடனே செய்ய முடியுமா என விசாரிக்க இலவசம் என்றால் உடனே செய்து விடலாம் இங்கேயே தங்கிக் கொள்ள வேண்டும் என மருத்துவ ஆலோசகர்கள் ஆலோசனைப்படி அங்கேயே உள் நோயாளியாக தங்கி அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்.

பிச்சைக்கார நிலையில் இருக்கும் ஏழைகளுடன் ஒரு ஏழையாக, அவர்கள் கொடுத்த படுக்கையில் படுத்துக்கொண்டு, தட்டு வாங்கி சாப்பிட்டு அந்த தேவதைப் பெண்டிர் செய்யும் சேவையை புகழ்ந்து பாராட்டி எழுதி இருந்தார். அடுத்த நாள் இவரின் கமாண்டோக்கள் மருத்துவ மனையை சுற்றி பாதுகாப்புக்கு வந்து குவிந்து விட யார் என்ன? எதற்கு என எல்லாம் பார்த்தால் இந்த தோள் பையை தூக்கி வந்த இந்த எளிய நபர்தான் பிரதமரின் ஆலோசகர் அவருக்குத்தான் இத்தனை பாதுகாப்பு எனத் தெரிந்ததாம். அப்படி மக்களோடு மக்களாக இருந்ததால்தான் அந்த சேவையாளர்களின் அரிய சேவையை கண் கூடாக பார்த்து உணர்ந்து அனுபவிக்க முடிந்தது என தமது அனுபவத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

எமது வாழ்வில் மகாத்மா, அன்னை தெரஸா, அப்துல் கலாம் இந்த மூவரே முன் மாதிரிகள். இந்த மூவருக்கும் எனக்கும் உள்ள தொடர்புகள் நிறைய. அது பற்றி எழுத அல்ல இந்த பதிவு. எனவே கலாமை மட்டும் தொட்டு அந்த மாமனிதரே இப்படி இலவசமாக கண்புரை அறுவை நீக்கச் சிகிச்சை செய்து கொண்டார் என்றால் நாம் எல்லாம் எம்மாத்திரம்? என்ற முதல் அடி ஆணவத்தை அப்படியே நொறுக்க இப்போது நாமிருக்கும் நிலையில் இது தான் சிறந்தது என அடுத்த அடி வழிகாட்டுகிறது.

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

# அலறிய காமராஜர்*

நிகழ்ச்சியோ, பொதுகூட்டமோ. நடந்தால் மக்களோ , தொண்டர்களோ. காலணா அரையணா, ஒரு அணா என்று கொடுப்பார்கள். அதை வாங்கி பையில் போட்டுக்கொள்வார் காமராசர். சென்னை வந்ததும் பார்ப்பார். ஐந்து ரூபாய், எட்டு ரூபாய் என்று சேர்ந்திருக்கும். அப்படியே கொண்டு போய் தன் நண்பரான 'இந்து' பத்திரிகை முதலாளி கஸ்தூரி ரங்கனிடம் கொடுத்து விடுவார். நீண்ட காலம் அப்படி நீடித்தது.

ஒரு முறை 'இந்து' கஸ்தூரிரங்கன் அவர்களுக்கு உடல் நிலை மோசமாகி விட்டது. பிழைப்போமா என்பதில் அவருக்கே சந்தேகம். காமராஜரை அழைத்தார். "சாகும்போது கடன்காரனாக சாக விரும்பபவில்லை. உம் பணத்தை உம்மிடமே ஒப்படைத்து விடத் தான் அழைத்தேன்" என்றார் பெருந்தலைவர் காமராஜருக்கு கண் கலங்கிப் போனது. 'அப்படி ஏதும் நடக்காது. நீங்கள் நல்லபடியாக எழுந்து நிற்பீர்கள். கவலைப்பட வேண்டாம். இந்த பணத்திற்காகதான் வரச் சொன்னீர் எனத் தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன்' என்றார்

.

சரி எத்தனை வருடம் எவ்வளவு தொகையை கொடுத்துவந்தீர்கள் என்பதாவது ஞாபகம் இருக்கா? கணக்கு வைத்துள்ளீரா? என்றார். அதெல்லாம் எனக்கு தெரியாது என்றார் காமராஜர். வீட்டில் உள்ளவர்களை அந்த நோட்டுப்புத்தகத்தை எடுத்து வரச் சொன்னார். தேதி வாரியாக எழுதி வைத்திருந்ததை காட்டி, இத்தனை ஆண்டுகள் இவ்வளவு தொகை இருக்கிறது என்று கூறியதோடு, 'எனக்கு ஏதாவது ஒன்று நடந்து விட்டால் பணத்தை காமராஜரிடம் ஒப்படைத்து விடுங்கள்' என்றும் வீட்டில் உள்ளவர்களிடம் கூறினார்.

பிறகு காமராஜர் நினைப்பை போலவே கஸ்தூரிரங்கன் குணமாகி நல்லபடியாக எழுந்தார். வழக்கம் போலவே ஒரு முறை இருவரும் சந்தித்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது 'ஒரு நல்ல தொகை இருக்கிறது. வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். ஏதாவது செய்து கொள்ளுங்கள்' என்றார் கஸ்தூரி ரங்கன். பதிலளித்த பெருந்தலைவர் 'அந்த பணத்தை வைத்து கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். சாப்பிடறது ரெண்டு இட்லி. அது எப்படியாவது எனக்கு கிடைச்சுடும். எனக்கெதற்கு பணம்' என்று யோசித்தவர் 'ஒன்று செய்யுங்கள் ஐய்யரே. உங்கள் கையாலேயே ஒரு இடத்தை வாங்கிகொடுங்கள்' என்றார்.

கஸ்தூரிரங்கனுக்கு மகிழ்ச்சி. இடத்தையாவது கேட்டாரே என்று. அலைந்து பிடித்து ஒரு பெரிய நிலத்தை பார்த்தார். விலை பேசினார். காமராஜர் கொடுத்து வைத்திருந்ததை விட கூடுதல் விலை. அந்த கூடுதல் பணத்தை ஐய்யரே போட்டு நிலத்தை பேசிமுடித்தார். பத்திரப்பதிவுக்கு பெருந்தலைவரை அழைத்தார். யார் பெயரில் என்று கேட்கிறார். உம் பெயரில் தான் என்ற பதிலை கேட்டு அலறிய காமராஜர் 'எனக்கு எதற்கு காசு பணம், சொத்து எல்லாம். நானா சம்பாதிச்சேன். மக்கள் கொடுத்த காசு. என் பெயரில் வேண்டாம் என்கிறார். எவ்வளவு கூறியும் கேட்கவில்லை. கடைசியில் காமராஜர் சொன்னபடியே கட்சியின் பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

அந்த இடம்தான் இன்று அண்ணா சாலையில் உள்ள 'தேனாம் பேட்டை காங்கிரஸ் கட்சி மைதானமும், பெரிய காமராஜர் அரங்கமும்'. கோடி கோடியான மதிப்பில் சொத்து. யார் யாரோ, எப்படியெல்லாமோ அனுபவிக்கிறார்கள். அந்த பெருந்தலைவர் இறந்த போது கூட அவர் வாங்கிய இடத்தில் அடக்கம் செய்யப்படவில்லை. கிண்டியில் பொது இடத்தில், பொதுசொத்தாகவே அடக்கம் செய்யப்பட்டார். தலைவர்கள்' எப்படியெல்லாம்

இருந்திருக்கிறார்கள் பாருங்கள். கர்ம வீரர் காமராஜரின் சாதனை எத்தனை பேருக்கு தெரியும் இந்த உண்மை யார் சிறந்தமனிதர்? ஏது 100 ஆண்டு பேசும் சாதனை?

**காமராசரின் ஆட்சி காலம்:**

ராஜாஜி நிதிப் பற்றாக்குறையைக் காரணமாகக் காட்டி, 6000 ஆரம்பப் பள்ளிகளை இழுத்து மூடினார். அடுத்தச் சில மாதங்களில் ஆட்சிக்கு வந்தார். காமராஜ். அது தான் அவர் முதன் முதலாக ஆட்சியில் அமர்வது. ஆட்சியில் இருந்த ராஜாஜி, அரசாங்கத்திடம் பணமில்லை என்று கூறி இழுத்து மூடிய 6000 பள்ளிகளைச் சில மாதங்களில் ஆட்சிக்கு வந்த காமராஜ் மீண்டும் திறக்கும்படி உடனடியாக ஆணையிட்டார். அத்தோடு நில்லாமல் 14000 புதிய பள்ளிகள் கட்ட உத்தரவிட்டார். படிக்க வரும் மாணவர்கள் பட்டினியாக இருக்கக் கூடாதென்று உணவும் அளிக்கத் திட்டம் தீட்டி நிறைவேற்றினார்!

நிதிப் பற்றாக்குறை, அரசாங்க கஜானா காலி என்று ராஜாஜி தமிழகத்தைப் பிச்சைக் கார மாநிலமாக முன்னிருத்தினார். ஆனால், அடுத்து ஆட்சிக்கு வந்த காமராஜ்அதே பிச்சைக்காரத் தமிழகத்தை இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் இரண்டாவது மாநிலமாகக் கொண்டுவந்து நிறுத்தினார்!

1. **நெய்வேலி நிலக்கரித் திட்டம்**
2. **பெரம்பலூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை**
3. **திருச்சி பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்**
4. **.ஊட்டி கச்சா பிலிம் தொழிற்சாலை**
5. **ஆவடி கனரக வாகன தொழிற்சாலை**
6. **கல்பாக்கம் அணுமின் நிலையம்**
7. **கிண்டி டெலிபிரின்டர் தொழிற்சாலை**
8. **சங்ககிரி துர்க்கம் சிமெண்ட் தொழிற்சாலை**
9. **மேட்டூர் காகிதத் தொழிற்சாலை**
10. **கிண்டி அறுவைச் சிகிச்சைக் கருவித் தொழிற்சாலை**
11. **துப்பாக்கித் தொழிற்சாலை**
12. **நெய்வேலி நிலக்கரி சுரங்கம்**
13. **சேலம் இரும்பு உருக்காலை**
14. **பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை**
15. **அரக்கோணம் இலகுரக ஸ்டீல் ப்லான்ட் தொழிற்சாலை**
16. **சமய நல்லூர் அனல்மின் நிலையம்**
17. **சென்னை அனல்மின் நிலையம்**
18. **நீலகிரி கச்சாபிலிம் தொழிற்சாலை**

இவை மட்டுமா? என்று இன்றைக்கும் விவசாயிகள் பெரும்பங்கு நம்பிக்கொண்டிருக்கும் பாசனத்திட்டங்கள் காமராஜ் உருவாக்கியவை!

***மணிமுத்தாறு***

***ஆரணியாறு***

***சாத்தனூர்***

***அமராவதி***

***கிருஷ்ணகிரி***

***வீடூர்***

# எதனால் மின்வெட்டு? யார் காரணம்?

'அனைத்தும் தனியார் மயம்' என்பதே பாஜக அரசின் தாரக மந்திரம்! அதானியும், டாடாவும் தான் மின் உற்பத்தி செய்வார்கள். அவர்கள் வசம் தான் நிலக்கரி சுரங்கங்களை தருவார்களாம்! அவர்களை நம்பியே மாநில அரசுகள் கைக்கட்டி நிற்க வேண்டுமாம்! தனியார் நிறுவனங்கள் தழைத்தோங்குவது ஒன்றே குறிக்கோளாம்!

கடுமையான கோடை வெயில் மக்களை வறுத்தெடுக்கும் வேளையில், தமிழகத்தில் மின்வெட்டு தற்பொழுது அறிவிக்கப்படாத நிகழ்வாக தொடர்கிறது. "மக்கள் ஒன்றும் கவலை கொள்ள தேவையில்லை" என்று மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினாலும், மின்வெட்டு சென்னை புறநகரில் தொடங்கி செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருப்பத்தூர் ,திருவண்ணாமலை கடலூர்,கன்னியாகுமரி என்று பல்வேறு மாவட்டங்களிலும் மின்வெட்டு அதிகரித்து மின்வாரிய ஊழியர்களுடன் பொதுமக்கள் கைகலப்பில் இறங்குமளவிற்கு பிரச்சினை ஆகியுள்ளது.

"அன்றாட மின்தேவை 15,500 மெகாவாட்டாக இருந்து வரும் தமிழகத்தில் நிலக்கரியிலிருந்து மின்உற்பத்தி செய்யும் தெர்மல் தொழிற்கூடங்கள் மொத்தம் ஐந்து உள்ளன! இவற்றில் தூத்துகுடியில் இருக்கும் இரண்டு உற்பத்தி கூடங்கள் சில காரணங்களால் மின் உற்பத்தியில் இல்லை. மீதமுள்ள மூன்று தெர்மல் கூடங்களும் சேர்ந்து உற்பத்தி செய்வது மொத்தம் 3380 மெகாவாட் மின்சாரமே. இவற்றுக்கான நிலக்கரி கையிருப்பு இன்னும் 4 அல்லது 5 நாட்களுக்கே போதுமானதாக உள்ளது , நிலக்கரி வரத்து தாமதமானாலோ, தடைப்பட்டாலோ மின் உற்பத்தியும் தடைபடும்" என டான்ஜெட்கோ பொறியியல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய 7,149 மெகாவாட் மினசாரம் நடை முறையில் 4607 மெகாவாட் அளவில் தான் கிடைக்கிறது. இந்த பற்றாக்குறை ஒருபுறமிருக்க, அதிலும் கடந்த வாரம் திடீரென்று 750 மெகாவாட் அளவிற்கு துண்டு விழுந்தது. இதையே, செந்தில் பாலாஜியும் மின்வெட்டிற்கான காரணமாக கூறியுள்ளார்.

மத்திய தொகுப்பிலிருந்து கிடைக்கும் மின்சாரமோ அல்லது மூன்று தெர்மல் கூடங்களில் இருந்து கிடைக்கும் மின்சாரமோ இவையெல்லாமே நிலக்கரி கையிருப்பைப் பொறுத்தே உள்ளது என்பது கசப்பான உண்மை. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக அளவு மின்வெட்டு உள்ளது என்று "அறிவாளி" அண்ணாமலை கூறுவது வேடிக்கையாக உள்ளது . ஏனென்றால், மின்வெட்டு ஜார்கண்ட் மாநிலத்தில் 22.2%, ராஜஸ்தான் 19%, ஜம்மு காஷ்மீர் 16% உத்தர பிரதேசத்தில் 26% அளவிற்கு மின்வெட்டு உள்ளதை மறந்தாரா அல்லது மறைக்கிறாரா தெரியவில்லை.

வட மாநிலங்களான உ.பி, ஹரியானா, ராஜஸ்தான் பஞ்சாப் ஆகியவற்றில் மின் பற்றாக்குறை தினசரி 1500 முதல் 3000 மெகாவாட் அளவில் உள்ளது . பவர்கட் அல்லது மின்வெட்டு இந்த மாநிலங்களில் தினசரி 4 மணி முதல் ஏழு மணி நேரம் வரை நீடிக்கிறது. ஆந்திரா மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் அன்றாட மின்வெட்டுடன் தொழிலகங்களுக்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் மின் வினியோகம் நிறுத்தப்படுகிறது.அகில இந்திய அளவில் மின் பற்றாக்குறை ஏப்ரல் மாதத்தில் 70 மில்லியன் யூனிட் அளவிற்கு உயர்ந்துள்ளது.

இந்தியா முழுவதும் மின்வெட்டு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நிலக்கரி சுரங்கங்கள் அதிகமிருந்தும் , நிலக்கரி உற்பத்தியை சீரமைத்துவிட்டோம் என்று

பியூஷ் கோயல் தம்பட்டம் அடித்த பின்னரும் போதுமான நிலக்கரி உற்பத்தியோ, உற்பத்தி கூடங்களில் போதுமான நிலக்கரி கையிருப்போ இல்லாதபொழுது கடந்த அக்டோபர் மாதத்திலேயே நிலக்கரி பற்றாக் குறையினால் மின் உற்பத்தி பெருமளவு தடைபட்டது. அப்பொழுது மெத்தனமாக இருந்த மோடி அரசு அதற்குப் பிறகும் பல வல்லுனர்கள் மற்றும் எதிர்கட்சியினர் குறிப்பாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எச்சரித்தும் எவ்வித திட்டமிடலோ, எதிர்கால கண்ணோட்ட நோக்கோ இன்றி இருந்தது! எந்தவித ஒருங்கிணைந்த நடவடிக்கையும் எடுக்காத ஒன்றிய அரசு மீண்டும் கவைக்குதவாத காரணங்களை இன்றைய நிலைக்கு காரணமாக கூறிக் கொண்டிருக்கிறது.

சுரங்கங்களை தனியாருக்கு தாரை வார்க்கும் கொள்கை கோளாறால் வந்ததே இந்த பிரச்சினை என்பது தான் நூறு சதவிகித உண்மை! எல்லாம் தனியார் தான் செய்ய வேண்டும் என பாஜக அரசு நினைக்கிறது. சுரங்க நிலக்கரி உற்பத்தியை, தனியார் முதலாளிகள் அதிக செலவைக் காரணம் காட்டி நிறுத்திவிட்டனர்! இதனால், எதிர்பார்த்த நிலக்கரி உற்பத்தி எட்டப்படவில்லை. இப்பொழுது சர்வதேச நிலக்கரி விலை எகிறுவதால் தனியார் முதலாளிகள் நிலக்கரி இறக்குமதியும் செய்ய மறுக்கிறார்கள். இதனால் மின் உற்பத்தியும் செய்வதில்லை, மாநில அரசுகளுடன் போட்ட மின் வினியோக ஒப்பந்தத்தையும் தனியார் கம்பெனிகளான அதானி மற்றும் டாடா நிறுவனத்தினர் மதிப்பதில்லை! இந்த நிலையே கடந்த இரண்டு மூன்று வருடங்களாக உள்ள யதார்த்த நிலைமையாகும்!

கடந்த ஏப்ரல் 26ந்தேதி எடுத்த கணக்கின்படி 201 GW மின் தேவை நாட்டில் உள்ளது. அதில் 8.2 GW குறைவாக நமது உற்பத்தி உள்ளது . இந்த பற்றாக்குறை வரும் நாட்களில் 30GW ஆக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் நம்மிடம் 400 GW உற்பத்தி செய்யும் நிறுவன சக்தி-installed capacity- உள்ளது . அதை வைத்துக் கொண்டு நம்மால் 200GW உற்பத்தி செய்ய முடியவில்லை என்பது வேதனை மட்டுமல்ல, நமது எச்சரிக்கை உணர்வையும் இது கேலிக்குரியதாக்குகிறது.





மின் உற்பத்தி நிலையங்களில் குறைந்த அளவே நிலக்கரி கையிருப்பு உள்ளதும், நிலக்கரி உற்பத்தியில் விளக்கவொண்ணா தேக்கநிலை உள்ளதும் மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி என்ற கணக்கில் உள்ளது.

கடந்த சில தினங்களில் நாடு முழுவதும் 603 மெயில், எக்ஸ்பிரஸ் மற்றும பாசஞ்சர் ரயில்கள் நிறுத்தப்பட்டன. காரணம் ரயில்வே நிர்வாகம் நிலக்கரி ஏற்றிக்கொண்டு குறிப்பிட்ட இடங்களை அடைவதற்கு ஏதுவாக இத்தனை ரயில் போக்குவரத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. முன்யோசனை என்பதே பாஜ ஆட்சியாளர்களுக்கு புரியாத விஷயமா?

**அல்லது எதைச்செய்தாலும் செய்யாவிட்டாலும் பக்த கோடிகள் ஆதரவு இருக்கும்வரை சமாளித்து விடலாம் என்ற மமதையா?**

**அக்டோபர் மாதத்திலேயே எச்சரிக்கை விடுத்த பின்னரும்,**
**கோடை காலத்தில் தேவை அதிகமாகும் என்பது புரிந்த பின்னரும்,**

மாநிலங்களுக்கிடையேயும், ஒன்றிய எரிசக்தி அமைச்சகத்திடையிலும் ரயில்வே அமைச்சகம் இடையிலும் எந்தவித ஆலோசனைகளோ, ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளோ எதுவுமே திட்டமிடப்படவில்லை! இவை நடந்தால் தானே செயல் வடிவம் கிடைக்கும்! ஏன் இப்பொழுது ரேக்குகள் (சரக்கு ரயில் பெட்டிகள்) போதுமான அளவில்லை என்று அங்கலாய்க்கின்றனர்? இதற்கு யார் பொறுப்பு?

கடந்த கோடை காலத்தில் (2021) அணல் மின் உற்பத்தி நிலையங்களில் நிலக்கரி கையிருப்பு -inventory stock- நிர்ணயிக்கப்பட்ட அளவில் 60 முதல்70 சதவிகிதத்திற்கும் மேலாக இருந்தது! ஆனால் இப்பொழுது கையிருப்பு 30-33 சதவிகித அளவே உள்ளது! மொத்தமுள்ள 173 நிலக்கரி மின் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களில் 105 நிறுவனங்களில் நிலக்கரி கையிருப்பு அளவு 25% க்கும் குறைவாகவே உள்ளது.

**மோடி அரசின் மெத்தனத்தையும், முன்யோசனையற்ற அலட்சியத்தையும் அன்றி வேறெதைக் காட்டுகிறது இது!**

சர்வதேச நிலக்கரி விலை இன்று எகிறிக்கொண்டிருந்தாலும் நமது மின் உற்பத்தியில் அவை பெரும் பங்கு வகிக்காது , காரணம் நமது தேவையில் அவற்றின் அளவு வெறும் 8 சதவிகிதம் மட்டுமே! ஆனால், நமக்கு வரும் செய்திகள் கூறுவது என்னவெனில், ஒன்றிய அரசு மாநில அரசுகளை அதிக விலை கொடுத்து சர்வதேச நிலக்கரியை இறக்குமதி செய்ய நிர்ப்பந்தம் கொடுப்பதுடன், அவற்றை உள்ளூர் நிலக்கரியுடன் 10% கலந்து உபயோகிக்கவும் அறிவுறுத்துகின்றனர். அதிக மின்உற்பத்திக்காக உள்ளூரில் கிடைக்கும் நிலக்கரியை மாநில அரசுகள் தனியார் மின்உற்பத்தி கூடங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்றனர் . சர்வதேசவிலை எகிறுவதால், உற்பத்தியை நிறுத்தி வைத்துள்ள தனியார் நிறுவனங்களுக்கு மோடி அரசு கொடுக்கும் பூஸ்ட் மாநில அரசுகளின் நிதி நிலையை காலியாக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

வெளிநாட்டு நிலக்கரியை கருத்தில் கொண்டு, துறைமுகங்களுக்கு அருகில் நிறுவப்பட்ட தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு உள்ளூர் நிலக்கரி சுரங்கங்களின் லைசன்ஸ் வழங்கப்பட்டன!

ஆனால், வெளிநாட்டு நிலக்கரி விலை அன்று குறைவாக இருந்தது. அதனால், உள்நாட்டு உற்பத்தியை கிடப்பில் போட்ட தனியார் நிறுவனங்கள் இன்று வெளிநாட்டு நிலக்கரி விலை அதிகமானதால் மின் உற்பத்தியையே நிறுத்திவிட்டனர் . அவர்களுக்கு உதவ மாநில அரசுகளை தூண்டுகிறது ஒன்றிய அரசு! இவர்களுக்கு மக்கள் மீதான விசுவாசத்தை விட தனியார் மீதான விசுவாசமே உயிர் மூச்சாக உள்ளது! தரகு வேலைக்கும் இந்த போக்கிற்கும் வித்தியாசம் உள்ளதா?

நிலக்கரி கையிருப்பின்மையும், மின் பற்றாக்குறையும் மாநில அரசுகளை ஒரு இக்கட்டான சூழலில் தள்ளியுள்ளது. மாநில மக்களின் வெறுப்பை, தொழில்துறையின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ள மாநில அரசுகள் வேறு வழியின்றி தனியார் மார்கட்டில் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் .

ஒருபுறம் அதிகவிலை கொடுத்து வெளிநாட்டு நிலக்கரி வாங்கி தனியார் நிறுவனங்களுக்கு சலுகை விலையில் அவற்றை கொடுக்க வேண்டும். மறுபுறம் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கி மக்களுக்கு தொழில் நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும் என்ற இருதலைக் கொள்ளி நிலையை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதே மோடி அரசின் சீர்திருத்த கொள்கை என்றால் மிகையில்லை!

**மோடி அரசின் பவர் செக்டார் ரிபார்ம்ஸ் என்பதான எரிசக்தி துறையின் சீரமைப்பு என்பது, உண்மையில் மாநில அரசுகளின் முதுகெலும்பை உடைப்பதே!**

***ச.அருணாசலம் (ARAM ONLINE-*** **May 2, 2022)**

---

## தமிழின் இன்றைய நிலை எப்படி இருக்கிறது?

## கடந்த 55 ஆண்டுகளாக இம்மியளவும் இந்தி திணிக்கப்படவில்லை! ஆனால், தமிழின் இன்றைய நிலை எப்படி இருக்கிறது?

1. பெரும்பான்மை மக்களுக்கு தமிழ் மாதங்களின் பெயரே தெரியவில்லை!
2. தமிழைப் படிக்காமலேயே ஒன்றாம் வகுப்பு முதல் கல்லூரி படிப்புவரை படித்து முடித்துவிடலாம் என்ற நிலை இங்குதான் இருக்கிறது!
3. தமிழ் படிக்கும் மாணவர்களிலும், குறைந்தது 10 ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்களில், 50% க்கும் மேற்பட்டவர்களுக்கு தமிழ் எழுத்துக்களை வரிசைக்கிரமமாக சொல்லத் தெரியவில்லை!
4. 8 ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்களில் பலருக்கு தமிழைப் படிக்கத் தெரியவில்லை!
5. அரசின் அறிவிப்புகள், சட்டமன்ற அலுவல்கள், அரசு அலுவலக நடைமுறைகள் எல்லாமுமே ஆங்கில நாட்காட்டிப்படி தான் நடக்கின்றன!
6. தமிழில் பிழையின்றி எழுத, பேச, படிக்க யாருக்கும் ஆர்வமில்லை! ஆர்வமிருப்பவர்களை வேண்டா-வெறுப்பாக பார்க்கும் கூட்டமும் இங்குதான் இருக்கிறது!
7. சரளமாக ஆங்கிலம் பேசத் தெரிந்தவனை எல்லாம் தெரிந்தவன், மெத்தப் படித்தவன் என்று நினைக்கும் போக்கு இங்குதான் நிலவுகிறது!
8. தமிழில் மட்டுமே பேசுபவனுக்கு ஒன்றுமே தெரியாது என்று முடிவுகட்டிவிடும் அறியாமையும் இங்குதான் இருக்கிறது!
9. பக்தி இலக்கியங்களை எள்ளி நகையாடி, நாத்திகம் பேசித் திரிபவர்களையே தமிழ் ஆர்வலர்கள் என்று சிறப்பிக்கும் மூடத்தனமும் இங்குதான் கொடிகட்டிப் பறக்கிறது!
10. தமிழில் படித்தால் வேலை கிடைக்காது, தமிழ் படித்தால் வயிறு நிரம்புமா, தமிழ் படிப்பதால் என்ன பயன் என்ற அரியவகை சிந்தனை கொண்ட ஜந்துக்களும் இந்த மண்ணில்தான் உலவுகின்றன!
11. என் மகன் கான்வென்ட்டில் படிக்கிறான், அவனுக்கு டமில் வராது என்ற அவலத்தையே பெருமையாகப் பேசும் வீணர்களின் தலைமுறை உருவானது இப்போதுதான்!
12. மங்கலமான திருமணப் பத்திரிகையை 'நோட்டீஸ்' என்று குறிப்பிடும் அமங்கலப் போக்கும் இந்த காலக்கட்டத்தில்தான் தோன்றியது!
13. தமிழ்க் கடவுள் என்று போற்றப்படும் முருகப்பெருமானை அவமரியாதை செய்யும் கூட்டம் தலையெடுத்ததும் இந்த மண்ணில்தான்!

14. தமிழன்னை, திருவள்ளூர், ஔவையார், பாரதியார், போன்ற தமிழ் அடையாளங்களுக்கு மாற்றுவேடம் பூட்டிய மாமேதைகள் தோன்றிய காலமும் இதுதான்!
15. தமிழை முன்னிறுத்தி பிழைக்கலாம் என்ற புதிய வாழ்வியல் நெறிமுறை உருவானதும் இப்போதுதான்!!
16. தமிழாசிரியர்களை கோமாளிகளாகவும், தமிழ் படித்தவனை செல்லாக்காசாகவும் சித்தரிக்கும் சினிமாக்கள் இங்கேதான் தயாராகின்றன!
17. வள்ளுவம் வெறுத்த கள்ளை வருமான உத்தியாக கையாளும் அரசுகளும் இப்போதுதான் உருவாயின!!
18. புலாலை மறுத்த வள்ளுவம் தோன்றிய தமிழ்நாட்டில் பிரியாணியை தேசிய உணவு என்று கருதும் அளவுக்கான சிந்தனை உருவானதும் இப்போதுதான்!
19. தமிழ் பாரம்பரிய அடையாளங்களான ஆலயங்களை வர்த்தக, வருமான மையங்களாக மாற்றி சீரழித்துவரும் அவலங்களும் இப்போதுதான் அரங்கேறுகின்றன!
20. சுயமரியாதை, அயராத உழைப்பு, விடாமுயற்சி பாரம்பரியத்துக்கு சொந்தக்காரர்களான தமிழர்களை இலவசத்துக்கும், சாராயத்துகும் மதி இழந்தவர்களாக்கிவிட்ட அரும்பணியும் இப்போதுதான் சாத்தியமாயிற்று!!
21. இப்படி எத்தனையோ அவலங்கள் இங்கே அரங்கேறி வருகின்றன! இத்தனையும் இந்தி திணிப்பு இல்லாமலேயே நடந்துவிட்டன! இந்நிலை நீடித்தால் சிந்துவெளி நாகரீக பக்கங்களில் தான் தமிழையும் பார்க்க வேண்டி வரும்!

---

## *<u>நமது சகோதரர்கள்</u>*

பெரும்பாலான நாடுகளில் சட்டங்களாலேயே குற்றங்கள் தோன்றுகின்றன; பெருகுகின்றன. அக்குற்றங்களைக் குறைக்க மேலும் சட்டங்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. சட்டங்களே மனிதர் வாழ்வைப் பாழாக்கும் மாயக் கருவிகளாக இருக்கின்றன. சமுதாயமே தனி மனிதர் குற்றங்களைச் செய்யக் காரணமாகின்றது.

எந்தச் சமுதாயம் தனி மனிதன் குற்றத்திற்குக் காரணமோ அதுவே தனி மனிதனைத் தண்டித்துக் கொண்டே இருக்கின்றது. நீதி எங்கே? சட்டம் எங்கே? குற்றம் எங்கே? தண்டனை எங்கே?

இந்த அலங்கோலத்திற்கு காரணம் என்ன? “ஜனநாயகம்” என்ற போர்வையில் “அரசியல்வாதிகள்” என்ற முத்திரையில் சுயநலமிகள் குழுவினர் குழுவினராக இணைந்து ஆட்சியை மாறி மாறிக் கைப்பற்றி மக்களை காயாடும் ஒரு சூதாட்டம் நடத்துவதே.

உத்தமர்கள் நிர்வாகத்தில் நிலைபெற முடியாமலும், உத்தமர்கள் ஆட்சியிலே பங்கெடுத்துக் கொள்ள முடியாமலும் சுயநலமிகள் புரியும் தந்திரங்கள் எவ்வளவு? இந்த நிலைமையில் இத்தகைய அரசியல்வாதிகளை அவர்கள் கொண்டுள்ள ஆட்சிப்போதை என்ற மயக்கத்திலிருந்து மக்கள் தாமே விடுதலை பெறவேண்டும். ஆட்சிப் போதை என்ற வெள்ளம் அவர்களை தாண்டி அடித்துச் செல்லுகின்றது.

வாருங்கள் சகோதரர்களே! ஓட்டுரிமை என்ற கருவியைச் சரியாகப் பயன்படுத்தி வெள்ளம் புறப்படும் இடமாகிய மதகை அடைத்து ஆட்சிப் போதை கொண்ட அரசியல்வாதிகளையும் அவர்களைத் தொடர்ந்து ஆபத்தில் சிக்கித் தவிக்கும் மக்களையும் நாமேதான் மீட்க வேண்டும்; ஏனெனில், அவர்கள் அனைவரும் மனித இனம்; நமது சகோதரர்கள்.

*- **அருட்தந்தை வேதாத்திரி மகரிசி* *வாழ்க்கை மலர்கள்: ஏப்ரல் 14***

## செயற்குழுக் கூட்டம் (16.04..2022)

இன்று (16.04..2022) நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன. கூட்டத்தில் அனைத்து செயலாளர்களும் பங்கேற்றனர்.

1. இயக்கத்தின் இவ்வாண்டின் (2021-2022) வருடாந்திர வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேறியது.

2. உறுப்பினர் ஆவதற்கு விண்ணப்பிக்கப்பட்ட கீழ்கண்ட விண்ணப்பங்கள் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது.

   - திரு அ, திரு.வி.சந்திரன் அவர்கள் ஆண்டு உறுப்பினரிலிருந்து ஆயுள் உறுப்பினராக தீர்மானம் நிறைவேற்றபட்டது.
   - திரு ஆ, திரு.ராஜேஷ் கணேசன் அவர்களின் விண்ணப்பம் ஆயுள் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளபடுகிறது.
   - திரு இ, திரு.ராதா கிருஷ்ணன் அவர்களின் விண்ணப்பம் புதிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்ட பின் பரிசீலிக்குமாறு முடிவு எடுக்கப்பட்டது.
   - திரு ஈ, திரு. இப்ராஹிம் என்பவர் 2 ஆண்டுகளுக்கு முன் தற்காலிக நீக்கம் கொடுக்கப்பட்டது. அது நீக்கப்பட்டு, ஆயுள் உறுப்பினராக தொடர தீர்மானம் நிறைவேறியது. (20.12.2019 நிர்வாககுழுக் கூட்டம் தீர்மானம் :வரிசை எண்ணின் படி)
   - திரு. பாலாஜி அவர்களின் விண்ணப்பம் ஆண்டு உறுப்பினரிலிருந்து ஆயுள் உறுப்பினராக தீர்மானம் ஏற்கப்பட்டது.

3. இயக்கத்தில் உச்சநீதிமன்றத்தில் வாதாட ஏற்படும் செலவுகளுக்கு தனி கணக்கு **(Account)** வைத்துக் கொள்ளுமாறு தீர்மானம் நிறைவேறியது.. சட்டநிதி **(LEGAL FUND)** என்று ஒன்று ஏற்படுத்தி, நன்கொடைகள் அனைத்தும் அதில் வரவு வைத்துக் கொள்ளப்படும்.

4. விரைவில் இவ்வருட பொதுக்குழு நடைபெறவுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளின் செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டி உள்ளது. அதற்குரிய தேர்தலை, அக்கூட்டத்தில் நடைபெறும். கீழ்கண்ட தேர்தல்குழுவை நிறுவி செயலாளர்களைத் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

   i. திரு.வி.முத்துசாமி(488) -குழுத்தலைவர்
   ii. .திரு.ஆர்.பாலாஜி (386) -உறுப்பினர்
   iii. .திரு.கே.சதிஷ்குமார்(136) -உறுப்பினர்

இக்குழு விரைவில் தேர்தல் அறிக்கை வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

5. பொதுச் செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ந. சுப்ரமணியன்
தலைவர்

வே. கார்த்திகை ராஜன்
பொதுச்செயலாளர்

சென்னை,ஜன.17: இடைத்தரகர்கள் அணுகுவதை தடுக்கும் வகையில் இனி பொதுமக்கள் பத்திரபதிவு சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வரும் நடைமுறையை மாற்றியமைக்கும் வகையில் புதிய திட்டம் ஒன்றை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக பதிவுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 575 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளது. இதன் மூலம் வீடு, விளை நிலம் உள்ளிட்ட சொத்து பரிமாற்றங்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த 2018ம் ஆண்டு முதல் ஆன்லைன் மூலம் பத்திரப்பதிவு செய்ய திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் எங்கிருந்து வேண்டுமானாலும் பத்திரம் பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம் என்ற நிலை இருந்தது. இதன் மூலம் பொதுமக்கள் எந்த தேதியிலும் பத்திரம் பதிவு செய்யலாம். ஆனாலும் பத்திரம் பதிவு செய்ய பொதுமக்கள் நேரில் செல்ல வேண்டிய நிலை இருந்தது. இந்த திட்டத்தின் மூலம் இடைத்தரகர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. குறிப்பாக பொதுமக்களிடம் பத்திரப் பதிவுக்கு லஞ்சம் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில் இப்பிரச்னைக்கு முடிவு கட்டும் வகையில் திமுக ஆட்சி பொறுப்பேற்ற நிலையில் பத்திரப்பதிவில் பல்வேறு அதிரடி மாற்றங்களை கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. அதன்படி பொதுமக்கள் இனிவரும் காலங்களில் பத்திரம் பதிவு செய்ய நேரில் வர வேண்டிய அவசியமில்லை. அதே நேரத்தில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்த சில நிமிடங்களிலேயே ஆய்வு செய்து அந்தப் பத்திரத்தை பதிவு செய்து திருப்பி தரும் வகையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. முதற்கட்டமாக பரிட்சார்த்த முறையில் தமிழகத்தில் 5 சார்பதிவாளர் அலுவலகங்களில் இந்த திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படுகிறது.

இந்த திட்டத்தில் சோதனை வெற்றி பெறும் பட்சத்தில் தொடர்ந்து மற்ற அலுவலகங்களில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்திற்காக தற்போது ஆதார் எண் மூலம் சம்பந்தப்பட்ட நபர் தானா என்று கண்டறியும் நடைமுறை தற்போது அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் இடைத்தரகர்களை அணுகுவது முற்றிலுமாக தடுக்கப்படும் என்று பதிவு துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பதிவுத் துறை உயர் அதிகாரி தகவல்

"ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்த சில நிமிடங்களிலேயே ஆய்வு செய்து அந்தப் பத்திரத்தை பதிவு செய்து திருப்பி தரப்படும்."



# பிறப்பு இறப்பு பதிவு

- உங்கள் இல்லங்களில் நிகழும் பிறப்பு / இறப்புகளை அருகிலுள்ள பிறப்பு / இறப்பு பதிவாளரிடம் 21 - நாட்களுக்குள் பதிவுசெய்யவேண்டும். பிறப்பு மற்றும் இறப்புகள் அவை நிகழ்ந்த இடத்திலயே பதிவு செய்யபடவேண்
- மருத்துவமணைகளில் நிகழும் பிறப்பு / இறப்புகளை, பிறப்பு இறப்பு பதிவாளரி பதிவுசெய்வதற்காக தெரியபடுத்துவது மருத்துவமணையின் கடமையாகும்.
- பிறப்பு / இறப்பு பதிவு சட்டம் 1969
  - பிறப்பு / இறப்பு பதிவு செய்வது நமது கடமை
  - பிறப்பு / இறப்பு 21 நாட்களுக்குள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்
  - பிறப்பு / இறப்பு பதிவு என்பது தனி நபரின் சட்டபூர்வ ஆதாரம்
- பிறப்பு / இறப்பு பதிவு செய்ய
  - பிறப்பு சான்றிதழ் பெயர் பதிவு செய்ய பெற்றோரின் உறுதிமொழி அவசியம்
  - இறப்பு சான்றிதழ் பெற குடும்ப உறுப்பினர் / நெருங்கிய உறவினர் உறுதிமொழி அவசி
  - கருவுற்ற தாய்மார்கள் PICME / RCH அவசியம்
- 1.10.2017 முதல் பிறப்பு / இறப்புகள் http://gccapp.chennaicorpration.gov என்ற இணையதளத்தின் மூலம் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- ஆதார் எண் பதிவு
  - பிறப்பு - பெற்றோர் ஆதார் எண்
  - இறப்பு - கணவன் / மனைவி / பெற்றோர் ஆதார் எண்
- காலதாமத பதிவு
  - 21 - நாட்களுக்குள் - இலவசம்
  - 21 - 30 நாட்கள் - ரூ. 100 /-
  - 30 - நாட்கள் முதல் 1 வருடத்திற்குள் - ரூ. 200 /-
  - 1 வருடத்திற்கு மேல் - ரூ. 500 /-
  
  (1 வருடத்திற்கு மேல் - சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாச்சியர் உத்தரவின் பேரி பதிவு செய்ய வேண்டும்)
- பெயர் பதிவு
  - 1 வருடத்திற்குள் - இலவசம்
  - 1 வருடம் முதல் 15 வருடத்திற்குள் - ரூ. 200 /-
- பதிவு கட்டணம்
  - பிறப்பு / இறப்பு பதிவில்லா சான்று பெற - ரூ. 100/-
  - தேடுதல் கட்டணம் ஒரு ஆண்டிற்கு - ரூ.100/-
  - பிறப்பு / இறப்பு சான்று நகல் பெற - ரூ. 200 /-
- கட்டணம் செலுத்தும் தலைப்பு

  **0210-80-800-AE -22708**
  **Birth & Death Late Fees**
- ஒரு முறை பதிவு செய்த பெயரை எக்காரணம் கொண்டும் மாற்றி பதிவு செய்த இயலாது.
- வயதிற்க்கான ஆதாரம் பள்ளியில் சேர, வேலை வாய்ப்பு பெற, பாஸ்போர்ட் பெ வாக்களிக்கும் உரிமை பெற, பிறப்பு சான்றிதழ் அவசியம்.
- குடும்ப உதவித்தொகை பெற, வாரிசு சான்றிதழ் பெற, ஆயுள் காப்பீட்டு பயன் பெற இறப்பு சான்றிதழ் அவசியம்.
- பிறப்பு, இறப்புகளை பதிவு செய்யும் போது, சரியான தகவல்களை அளித்து சான்றிதழ் பெறவும்.



# Building plan violators must pay five times the actual taxes: HC

## Bench dismisses plea against lock and seal notice

LEGAL CORRESPONDENT
CHENNAI

No application for plan approval of a constructed building should be entertained by officials concerned, the Madras High Court has said. It said owners of buildings constructed in violation of the approved plan must be made to pay five times the actual electricity charges, property tax and water and sewerage taxes until they set right the violations.

A Division Bench of Justices S. Vaidyanathan and D. Bharatha Chakravarthy made the observations while dismissing a writ petition filed by B. Kanchana, a 70-year-old widow, who had constructed a residential house at Nerkundram without getting the building plan approval from the Greater Chennai Corporation. She had challenged the lock and seal notice issued by the Corporation and sought a direction to the Housing Secretary to dispose of her appeal.

Rejecting her plea, the judges wrote, "No application for approval after completion of the building can be entertained as it would amount to putting a cart before a horse."

The Bench also insisted that the officials concerned inspect all buildings under construction right from the stage of laying the basement itself so that the setback area required to be left vacant around every building, as per the approved plan, was adhered to strictly.

### 'Must grant time'

The judges also said the applicants for building plan approvals must grant sufficient time for the officers to process their applications and take a decision one way or the other.

"Any request for an instant approval will pave the way for 'under the table dealing' and in that process, the officials will flourish and their belly will get doubled with the money received as bribe," the Bench observed.

In so far as those who had violated approved building plans, the court said, though electricity might be an essential service, it could be provided at a premium for such violators until they set right those violations. Not just electricity but also property tax, water and sewerage taxes could be collected five times the regular charges to send out a stern message.

### No leniency

"Last but not the least, we want to emphasise that courts must be slow in granting relief, much less interim relief, in cases where violators approach the court for relief. Even a direction for disposal of representation will give rise to another round of litigation and judges must ensure that no leniency is shown to the violators," the Bench concluded.

M CH-CH

# Tamil Nadu to enact legislation governing apartment ownership

## Tamil Nadu Apartment Ownership Act, 1994 to be repealed

DENNIS S. JESUDASAN
CHENNAI

The Tamil Nadu government has decided to enact legislation by repealing the Tamil Nadu Apartment Ownership Act, 1994 and has released the memorandum of legislation inviting comments from the public. The decision has been taken in view of the changing scenario in the real estate sector, with the establishment of new bodies like the Real Estate Regulatory Authority (RERA).

Though the Tamil Nadu Apartment Ownership Act, 1994 was enacted to effectively manage the apartment community and acknowledge the rights and duties of apartment owners, envisaging the formation of an association of apartment owners or a society to undertake maintenance and management of common areas and facilities in the property, several shortcomings and practical difficulties in complying with the requirements were observed.

"The real estate sector has undergone a drastic transformation since the enactment of the Act in 1997. During the last four decades, the housing industry has come a long way and has witnessed the development of not only standalone high-rises but also large complexes and townships with multiple residential and commercial provisions, including phased developments," the statement of the objects and reasons of the memorandum said.

As the scenario had changed, the replacement of the existing Act with new provisions that were more responsive to present-day needs was required, a senior official told *The Hindu*. "We are planning to hold a meeting in this regard with stakeholders, possibly next week," the official said.

"One declaration for each project; only one recognised association of apartment owners; model by-laws to be followed by the association; and the formation of a federation of associations in case of large complexes with more than one project are among the provisions that are envisioned in the memorandum.

Provisions for the re-development of a dilapidated building with two-thirds consent of apartment owners; introduction of penal provisions for non-submission to the provisions of the Act; and introduction of grievance redressal mechanisms and definitions in line with the RERA Act for effective and efficient adjudication are among the other provisions in the memorandum.

Comments from the general public on the memorandum of legislation may be sent to housing.dept@tn.gov.in or addressed to Mr. S. Veeramani, Additional Secretary, Housing and Urban Development Department, Secretariat, Chennai - 600009, on or before April 11. A copy of the memorandum can be accessed here: https://rb.gy/ksckz6.

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- மே 2022**

Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20



திருட தைரியம் இல்லாதவர்கள் பிச்சை எடுக்கிறார்கள்...

பிச்சை எடுக்க வெட்கப்படுபவர்கள் திருடி விடுகிறார்கள்...

இவ்விரண்டையும் சேர்த்தே செய்ய விரும்புவர்கள் லஞ்சம்

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 May 2022
Due to corona published online)

செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்று எம்சிறு செந்நாவே !

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!